## PART - III

# பொருளியல் / ECONOMICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 2.30 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 2.30 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I /PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. கிடப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர் :
(அ) ஆல்ஃபிரட் மார்ஷல்
(ஆ) இலயனல் ராபின்ஸ்
(இ) ஆடம் ஸ்மித்
(ஈ) சாமுவேல்சன்
The author of scarcity definition is :
(a) Alfred Marshall
(b) Lionel Robbins
(c) Adam Smith
(d) Samuelson

2. பழமைப் பொருளாதாரம் என்பது :
(அ) கட்டளைப் பொருளாதாரம்
(ஆ) பணவியல் பொருளாதாரம்
(இ) தன்னிறைவுப் பொருளாதாரம்
(ஈ) சந்தைப் பொருளாதாரம்
Traditional economy is a :
(a) Command economy
(b) Monetary economy
(c) Subsistence economy
(d) Market economy

3. இன்றியமையாத, வசதி, ஆடம்பர பண்டங்கள் என்பது :
(அ) பயன்பாட்டினை பிரிப்பது
(ஆ) தேவையைப் பிரிப்பது
(இ) இலவச பண்டங்களை வகைப்படுத்துவது
(ஈ) விருப்பங்களை வகைப்படுத்துவது
Necessaries, comforts and luxuries are :
(a) Classification of utility
(b) Classification of demand
(c) Classification of free goods and services
(d) Classification of wants

4. நுகர்வோர் எச்சம் என்பது :
(அ) தேவை = அளிப்பு
(ஆ) தேவை > அளிப்பு
(இ) தகுதி விலை – உண்மை விலை
(ஈ) $MVn = TVn - TVn - 1$
Consumer surplus is :
(a) Demand = Supply
(b) Demand > Supply
(c) Potential Price – Actual Price
(d) $MVn = TVn - TVn - 1$

5. இறுதி நிலை பயன்பாடு பூஜ்ஜியமாகும் போது :

(அ) மொத்தப் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்குகிறது

(ஆ) மொத்தப் பயன்பாடு குறையத் தொடங்குகிறது

(இ) மொத்தப் பயன்பாடு மிக குறைந்த அளவை எட்டுகிறது

(ஈ) மொத்தப் பயன்பாடு உச்ச அளவை எட்டுகிறது

When marginal utility becomes Zero :

(a) The total utility starts increasing

(b) The total utility starts decreasing

(c) The total utility reaches the minimum

(d) The total utility reaches the maximum

6. தேவையின் அதிகரிப்பை இதன் மூலம் காணலாம் :

(அ) தேவை வளைகோட்டின் உச்ச புள்ளி

(ஆ) தேவை வளைகோட்டின் கீழ் புள்ளி

(இ) தேவை வளைகோடு இடம் பெயர்வது

(ஈ) ஒரே தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல்

Increase in demand is shown by :

(a) The highest point on the demand curve

(b) The lowest point on the demand curve

(c) Shifts of the demand curve

(d) Movement along the same demand curve

7. குறுக்குத் தேவை நெகிழ்ச்சி எதிர்மறை எண்ணாக இருந்தால் :

(அ) X பண்டமும் Y பண்டமும் பதிலீட்டுப் பண்டங்கள்

(ஆ) X பண்டமும் Y பண்டமும் நிறைவான பதிலிகள்

(இ) X பண்டமும் Y பண்டமும் உறவற்றவை

(ஈ) X பண்டமும் Y பண்டமும் உடனுறுப் பண்டங்கள்

When cross elasticity of demand is negative :

(a) X and Y goods are substitutes

(b) X and Y goods are perfect substitutes

(c) X and Y goods are not related

(d) X and Y goods are complementary

8. சமநிலை புள்ளியில் :

(அ) விலை நிலையானது

(ஆ) தேவையும் அளிப்பும் சமம்

(இ) அப்புள்ளியில் தேவைக்கோடு அளிப்புக் கோட்டை வெட்டும்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

At the point of equilibrium :

(a) Only one price prevails

(b) Quantity demanded = Quantity supplied

(c) The demand curve intersects the supply curve

(d) All the above

9. உற்பத்தி என்பது :

(அ) மாற்று மதிப்பு

(ஆ) தொழில்நுட்பம்

(இ) பயன்பாட்டின் அழிவு

(ஈ) பயன்பாட்டை உருவாக்குதல்

Production refers to :

(a) Exchange value

(b) Technology

(c) Destruction of utility

(d) Creation of utility

10. வெற்றிகரமான தொழில் முனைவோர் என்பவர் :

(அ) பல்வேறு உற்பத்தி கலவைகளை தீர்மானிப்பவர்

(ஆ) குறைந்த கூலியை வழங்குபவர்

(இ) புனைதலை பயன்படுத்துபவர்

(ஈ) இடர் தாங்கலை மறுப்பவர்

A successful entrepreneur is one who :

(a) Decides different combinations of factors of production

(b) Pays the lowest wage

(c) Accepts innovations

(d) Avoids risks

11. சராசரி மாறாச் செலவு இதனால் வகுக்கும்போது கிடைக்கும் :

(அ) TVC/Q (ஆ) AC/Q (இ) TC /Q (ஈ) TFC/Q

Average fixed cost is obtained by dividing :

(a) TVC/Q (b) AC/Q (c) TC/Q (d) TFC/Q

12. __________ திட்ட வளைகோடு என அழைக்கப்படுகிறது.

(அ) நீண்டகாலச் செலவுக் கோடு (ஆ) குறுகியகாலச் செலவுக் கோடு

(இ) சராசரி செலவுக் கோடு (ஈ) இறுதிநிலைச் செலவுக் கோடு

__________ is called the planning curve.

(a) Long run average cost curve (b) Short run average cost curve

(c) Average cost curve (d) Marginal cost curve

13. எந்த நிலையில் ஒரு நிறுவனம் சமநிலைப் பெறும் :

(அ) MR = AR (ஆ) MR = AC (இ) MC = MR (ஈ) MC = AC

A firm can achieve equilibrium when its :

(a) MR = AR (b) MR = AC (c) MC = MR (d) MC = AC

14. நிறைவுப் போட்டியில் தேவைக்கோடு இவ்வாறு இருக்கும் :

(அ) கீழ்நோக்கி சரிந்து செல்லும் (ஆ) செங்குத்தாக இருக்கும்

(இ) மேல்நோக்கி சரிந்து செல்லும் (ஈ) கிடைமட்டமாக இருக்கும்

Under perfect competition, the demand curve is :

(a) Downward sloping (b) Vertical

(c) Upward sloping (d) Horizontal

15. பண்ட வேறுபாடு ________ ன் சிறப்பு இயல்பாகும்.

(அ) முற்றுரிமையாளர் போட்டி

(ஆ) இருவர் முற்றுரிமை

(இ) நிறைவுப் போட்டி

(ஈ) முற்றுரிமை

Product differentiation is the salient feature of :

(a) Monopolistic competition

(b) Duopoly

(c) Perfect competition

(d) Monopoly

16. பேரியல் பொருளாதாரத்தின் மையப் பிரச்சனை :

(அ) வட்டியும் பணமும்

(ஆ) பணக்கொள்கை மற்றும் நிதிக்கொள்கை

(இ) வருமானமும் வேலை வாய்ப்பும்

(ஈ) விலையும் வெளியீடும்

The central problem of Macro Economics is :

(a) Interest and Money

(b) Monetary Policy and Fiscal Policy

(c) Income and Employment

(d) Price and Output

17. வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டை விளக்க கீன்சு ________ பயன்படுத்தினார்.

(அ) உற்பத்தியையும் செலவையும்

(ஆ) பெருக்கியையும் மற்றும் முடுக்கியையும்

(இ) நுகர்வையும் முதலீட்டையும்

(ஈ) ஒட்டுமொத்த தேவையும் ஒட்டு மொத்த அளிப்பும்

To explain the simple theory of income determination, Keynes used ________.

(a) Production and Expenditure

(b) Multiplier and accelerator

(c) Consumption and investment

(d) Aggregate demand and aggregate supply

18. நுகர்வு சார்பு, __________ மற்றும் __________ ஆகிய இரண்டுக்கும் இடையேயான தொடர்பை விளக்குகிறது.

(அ) வருமானம், சேமிப்பு

(ஆ) செலவு, முதலீடு

(இ) நுகர்வு, வருமானம்

(ஈ) செலவு, சேமிப்பு

Consumption function explains the relationship between __________ and __________.

(a) Income, Savings

(b) Expenditure, Investment

(c) Consumption, Income

(d) Expenditure, Savings

19. பணக் கொள்கையை அமல்படுத்துவது :

(அ) மைய வங்கி

(ஆ) தனியார் துறை

(இ) மைய அரசு

(ஈ) மாநில அரசு

Monetary policy is controlled by :

(a) Central Bank

(b) Private Sector

(c) Central Government

(d) State Government

20. பூஜ்ஜிய நிதி நிலை அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு __________ ஆக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(அ) புதிய ஆண்டு

(ஆ) கல்வியாண்டு

(இ) அடிப்படை ஆண்டு

(ஈ) நிதியாண்டு

In zero based budget every year is considered as a :

(a) New year

(b) Academic year

(c) Base year

(d) Financial year

## பகுதி - II / PART - II

7x2=14

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 -ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

Answer **any seven** questions and question number 30 is **compulsory**.

**21.** பொருளாதாரம் பற்றி ஆல்பிரட் மார்ஷலின் இலக்கணம் யாது ?

State Alfred Marshall's definition of Economics.

**22.** விருப்பங்களுக்கான காரணங்கள் யாவை ?

What are the causes of wants ?

**23.** தேவை நெகிழ்ச்சியின் வகைகள் யாவை ?

What are the types of elasticity of demand ?

**24.** சமமுறிவுப் புள்ளி என்றால் என்ன ?

What is break even point ?

**25.** விலை பேதத்தின் இரண்டு நிபந்தனைகள் யாவை ?

What are the two conditions for price discrimination ?

**26.** மாற்று ஊதியம் என்பது யாது ?

What is transfer earnings ?

**27.** போலி வாரம் என்றால் என்ன ?

What is quasi-rent ?

28. இறுதி நிலை நுகர்வு நாட்டத்திற்கு சூத்திரம் தருக.

Give the formula for Marginal Propensity to Consume.

29. கடன் அளவுக் கோட்பாட்டின் கருவிகள் யாவை ?

What are the instruments of quantitative credit control ?

30. பேராசிரியர் செலிக்மேனின் வரி - இலக்கணத்தினைக் கூறுக.

State the Definition of a tax According to Prof. Seligman.

## பகுதி - III / PART - III

**ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -ற்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். 7x3=21

Answer **any seven** questions and question number **40** is **compulsory.**

31. ஆடம் ஸ்மித்தின் செல்வ இலக்கணத்தைப் பற்றிய குறைபாடுகளை ஆராய்க.

Examine the criticisms against Adam Smith's wealth definition.

32. கலப்பு பொருளாதாரத்தின் நன்மைகளை விளக்குக.

Explain the merits of a mixed economy.

33. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு குறிப்பிடுவது என்ன ?

What does a production possibility curve refer ?

34. கிஃபன் புதிரைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

Write a short-note on Giffen Paradox.

35. அங்காடி காலத்தில் சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ?

How is equilibrium price determined in the market period ?

36. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?

What are the functions of entrepreneur ?

37. முற்றுரிமையை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை ?

What are the methods of controlling monopoly ?

38. இறுதி நிலை உற்பத்தித் திறன் பகிர்வுக் கோட்பாட்டின் குறைபாடுகள் யாவை ?

What are the limitations of Marginal Productivity Theory of Distribution ?

39. கீன்சின் வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டின் எடுகோள்களை விளக்குக.

What are the assumptions of Keynesian theory of Simple Income Determination ?

40. பண்டமாற்று முறையில் உள்ள பிரச்சனைகளை விளக்குக.

Explain the difficulties of barter system.

## பகுதி - IV / PART - IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

Answer **all** the questions. 7x5=35

41. (அ) சமதர்மத்தின் பண்புகளையும், அதன் சிறப்புகளில் எவையேனும் நான்கினையும் விளக்குக.

**அல்லது**

(ஆ) குறைந்து செல் பயன்பாடு விதியினை படம் வரைந்து விளக்கம் தருக.

(a) Explain the features and any four merits of socialism.

**OR**

(b) Describe the Law of Diminishing Marginal Utility with a diagram.

42. (அ) சமநோக்கு வளைகோட்டு ஆய்வின் எடுகோள்கள் யாவை ? சமநோக்கு வளைகோடு வழியாக நுகர்வோர் சமநிலையை விளக்குக.

அல்லது

(ஆ) விலைத் தேவை நெகிழ்ச்சியின் புள்ளி முறையில் அளவிடுவதை விரிவாக எழுதுக.

(a) What are the assumptions of indifference curve analysis ? Explain consumer's equilibrium using indifference curve approach.

OR

(b) Explain the point method of measurement of price elasticity of demand in detail.

43. (அ) தேவை விதியைக் கூறுக. தேவை விதியின் விதிவிலக்குகள் யாவை ?

அல்லது

(ஆ) சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை வரைபடத்துடன் விளக்குக.

(a) State the law of demand. What are the exceptions to the law of demand ?

OR

(b) Explain the determination of equilibrium price with a diagram.

44. (அ) சமஅளவு உற்பத்திக் கோடுகள் என்றால் என்ன ? அதன் இயல்புகளை விளக்குக.

அல்லது

(ஆ) ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் பல்வேறு செலவுகளை விளக்குக.

(a) What are isoquants ? Describe their characteristics.

OR

(b) Explain various costs incurred by a firm.

45. (அ) குறுகிய காலத்தில், நிறைவுப் போட்டியில் விலை மற்றும் பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன ?

அல்லது

(ஆ) முற்றுரிமைப் போட்டியில் விலை மற்றும் பண்டங்கள் அளவு எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

(a) How is price and output determined in the short-run under perfect competition ?

OR

(b) Explain the price and output determination under monopolistic competition.

46. (அ) ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டினை ஆராய்க.

அல்லது

(ஆ) J.B. சேயின் அங்காடி விதியினை திறனாய்க.

(a) Examine Ricardian theory of RENT.

OR

(b) Critically examine J.B. Say's Law of Markets.

47. (அ) பண அளவீட்டுக் கோட்பாட்டை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) நிதிக்கொள்கையின் நோக்கங்கள் எவையேனும் ஐந்தினை விவரிக்க.

(a) Describe the quantity theory of money.

OR

(b) Explain any five of the objectives of fiscal policy.

-oOo-